**களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் - 2012**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும்அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும்காசுப்பாய்ச்சலினையும்இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றதுஎன்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

ஈ.டபள்யூ. குணதிலக நிதியத்தின் முதலீடுகள் மற்றும் ஏனைய 03 முதலீடுகள் தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 71,170 வட்டித் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும்இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை | |
| XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியினருக்கு ரூபா 8,425,286 சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருப்பினும், தாபனவிதிக் கோவையின் படி வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் விடுமுறைகளை உறுதிப்படுத்துவதற்காகவும் தொடர்புடைய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கையேடு | |
| (i) நி.பி. 104(2) | 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் ஆரம்ப விசாரணை அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (i) நி.பி. 371 | 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 81,627 தொகையான 05 முற்பணங்கள் 2013 யூன் 06 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 26,332,811 கிரயங்கொண்ட நிலையான சொத்துக்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1990 ஒக்தோபர் 10ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | வாகன எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 9,209,969 பற்றாக் குறையொன்றானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 6,633,488ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 6,500,000 ஆன அரசாங்க மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா. 2,709,969 வரை குறைவடைந்திருந்ததுடன். முன்னைய ஆண்டின்மீண்டெழும் செலவினங்களுக்காகஅரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 7,314,146 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா680,658 மிகையாகியிருந்தது. அதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 3,390,627 பின்னடைவிற்கு கல்விசார் பதவியணியின் சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 2,995,822 ஆல் அதிகரித்திருந்தமையும் உடன்படிக்கைச் சேவைகள் ரூபா 1,161,298 ஆல் அதிகரித்திருந்தமையுமே பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

03 கல்வியாண்டுகள் தொடர்பில் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட 07 ஓராண்டுப் பாடநெறிகளின் பொழிப்பாக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| கல்வி ஆண்டு | பதிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | சித்தியடையாத மாணவர் எண்ணிக்கை | சித்தியடையாத மாணவர் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| 2009/2010 | 404 | 389 | 357 | 32 | 8.23 |
| 2010/2011 | 469 | 408 | 336 | 72 | 17.65 |
| 2011/2012 | 464 | 393 | 311 | 82 | 20.87 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாணவர்களைப் பதிவுசெய்தல்

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மாணவர்களைப் பதிவுசெய்தலில் குறிப்பிடத்தக்க முரண்கள் காணப்படாத போதிலும் பாலி கற்கைகள் கலைமானிபட்டப்பாடநெறி (சிங்களம்) மற்றும் பௌத கற்கைகள் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சிங்களம்) பாடநெறிகளிற்கான மாணவர் பதிவுகளில் முறையே 33 சதவீத மற்றும் 59 சதவீத குறைவொன்று காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டளவில் நிறுவகம் 7 ஒரு நாள் பாடநெறிகளை நடாத்தியிருந்ததுடன் அவற்றில் பௌத்த கற்கைகள் கலைமானி (சிங்களம்) மற்றும் பௌத்த கற்கைகள் கலைமானி (ஆங்கிலம்) ஆகிய பாடநெறிகள் இரண்டிற்கே மாணவர்களின் பங்களிப்பு கூடுதலாக கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இந்தப் பாடநெறி இரண்டிற்குமான மாணவர் பதிவு மீளாய்வாண்டிற்கான மொத்த மாணவர் பதிவில் 80 சதவீதமாக காணப்பட்டது.

(iii) நிறுவகம் 02 பௌத்த கற்கைகள் கலைமானி பட்டப் பாடநெறிகளை நடாத்துவதுடன் அதில் ஆங்கிலப் பாடநெறிக்கான மாணவர் பதிவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் சிங்களப் பாடநெறிக்கான மாணவர் பதிவு 10.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) பரீட்சைகளிற்கு தோற்றுதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள்

(i) 2012 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்தமாக பதிவுசெய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 464 ஆக காணப்பட்ட போதிலும் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 393 ஆக மாத்திரம் காணப்பட்டது. அதன்படி பரீட்சைக்குத் தோற்றியிருக்காத மாணவர் எண்ணிக்கை 71 ஆகும்.

(ii) மீளாய்வாண்டில் பரீட்சைகளுக்கு தோற்றியிருந்த மொத்தம் 393 மாணவர்களில் 311 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்திருந்தமையால் அது 79 சதவீதமாக காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவசெயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நோக்கங்களிற்காக 1984 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஈ.டபிள்யூ குணதிலக நிதியம் எவ்வித ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் பெறுமதி ரூபா 206,166 ஆக காணப்பட்டது.

(ஆ) 1991 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 133,149 வெளிநாட்டு புலமைப்பரிசில், நிர்மாணக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் பெறுமதி ரூபா 700,394 ஆக காணப்பட்டது. இருப்பினும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கமான வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வழங்குவதற்காக இப்பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பதவியணியினர் நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **கல்விசார் பிரிவு** | | | |
| பேராசிரியர்/சிரேஷ்ட விரிவுரையாளர் | 04 | 04 | - |
| நூலகர்/உதவி நூலகர் மற்றும் விஞ்ஞான உதவியாளர் | 04 | 03 | 01 |
| **கல்விசாரா பிரிவு** | | | |
| நிறைவேற்றுனர் | 05 | 05 | - |
| எழுதுவினைஞர் மற்றும் ஒத்த தரங்கள் | 15 | 15 | - |
| கனிஷ்ட | 08 | 07 | 01 |
| | 36 | 34 | 02 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு பேராசியர் பதவி வெற்றிடங்களிற்காக இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

## 3.4 ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக நிதியமொன்றை உருவாக்குதல்

ஊழியர் பணிக்கொடைக்கான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,504,383 ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதியமொன்றை உருவாக்குவதற்கும் அத்தொகையினை முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 வாகனக் கட்டுப்பாடு

### வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353/(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம்,ரூபா 40,000 எல்லைக்குட்பட்ட மாதாந்த வாடகைக்கு மாத்திரம் வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், அச்சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக 1 கி.மீற்றரிற்கு ரூபா 36 வீதம் செலுத்தும் அடிப்படையில் 2012 சனவரி 05 முதல் 2012 ஏப்ரல் 05 ஆந் திகதி வரை வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. அவ்வாறே கொள்வனவுச் சபையின் அங்கீகாரமின்றி இயந்திரப் பொறியியலாளர் ஒருவரால் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டு 1 கி.மீற்றரிற்கு ரூபா 41 வீதம் செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 24,065 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2012 ஆம் ஆண்டின் நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, நூலகம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணாமல் போயிருந்த 122 புத்தகங்களின் பெறுமதி ரூபா 33,211 ஆகும்.

## 3.7 மெதுவாக நகர்வுறும் மீதிகள்

2012 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 15 பிரசுரங்களிற்குரிய 4,462 புத்தகங்களில் 2012 திசெம்பர் 14 ஆந் திகதி வரை 23 புத்தகங்களே விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் 4,438 புத்தக இருப்பு காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம், நிறைவேற்றப்பட வேண்டிய காலஎல்லை, பொறுப்புக்களை ஒப்படைத்தல் மற்றும் நிதியளிப்புகள் தொடர்பான விபரங்களை காட்டக்கூடியவாறு உரிய படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த செயற்பாடுகள் 05 ஆக காணப்பட்ட போதிலும், அதில் ஒரு செயற்பாட்டினை நிறைவேற்ற முடியாது போயிருந்ததுடன் ஏனைய செயற்பாடுகளில் 50 சதவீத செயன்முன்னேற்றம் காணப்பட்டது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களை ஒப்பிடுகையில் 10 சதவீதத்திலிருந்து 120 சதவீதம் வரையான வீச்சளவில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

**பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு காணியொன்றை பெற்றுக்கொள்ளல்**

பாலி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 1996 ஆம் ஆண்டில் சர்வதேச பௌத்த மன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 5,031,984 தொகை கட்டிட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு அதற்குச் சமமான தொகை நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2012 திசெம்பர் 31 வரை காணியினைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதுவாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்தில் நிறுவனம் நடாத்திச்செல்லப்பட்டு வருவதுடன் 2012 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் அதற்காக ரூபா 4,695,000 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நானாவித முற்பணங்கள்

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) நூலக நிர்வாகம்

(உ) ஆராய்ச்சி உதவிகள்

(ஊ) பரீட்சைகள் நிர்வாகம்